# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- WEEKLY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- TOPICWISE QUESTION
- MONTHLY QUESTION AND ANSWER

**17.09.2022**

**WEBSITE LINK** : https://gkrsinstitute.com/

**Telegram Link** : https://t.me/gkrsInstitute

**FACEBOOK LINK** : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

## முக்கிய தினங்கள்

1. 17.09.2022
    - **சமூக நீதி நாள்**
        - தந்தை பெரியர் பிறந்த தினம்

## மாநில செய்திகள்

1. திருச்சியில் பெரியார் உலகம்
    - பெரியார் பிறந்த தினத்தை ஒட்டி திருச்சியில் அமையுள்ள **'பெரியார் உலகம்'** கட்டுமான பணிகள் தொடங்கப்பட உள்ளன.
    - திருச்சி - சென்னை நெடுஞ்சாலையில் உள்ள **சிறுகனூரில்** பெரியார் உலகம் அமைக்கப்பட உள்ளது.
    - சுமார் 30 ஏக்கருக்கும் கூடுதலான பரப்பில் அமைய உள்ள இந்த பெரியார் உலகத்தில், **95 அடி உயரச்சிலை, ஆய்வகம், பயிலகம் அதை ஒட்டிய நூலகம்** முதலிய பல்வேறு அம்சங்கள் ஏற்படுத்தப்பட உள்ளன.
    - இதன் கட்டுமான பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைக்க உள்ளார்.
    - பெரியாரின் பிறந்த தினம் **சமூக நீதி நாளாக** கடைப்பிடிக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

2. மதுரையில் ரூபாய் 600 கோடியில் டைட்டில் பூங்கா
    - குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் **'தோள் கொடுப்போம்'** தொழில்களுக்கு தென்மண்டல மாநாடு மதுரையில் நடைபெற்றது.
    - **புதிய தொழில் குழுமங்கள் தொடக்கம்**:
        - **அந்தந்த பகுதிக்குரிய சிறு தொழில்களை ஊக்குவிக்கும் வகையில் தொழில் குழுமங்கள் உருவாக்கப்படுகின்றன.**
        - **காஞ்சிபுரம் நரிக்குறவர் பாசிமணி குழுமம்,**
        - **திருநெல்வேலியில் சமையல் பாத்திரக் குழுமம்**
        - **திருப்பத்தூரில் ஊதுபத்தி குழுமம்**
        - **சேலம் மாவட்டம் தம்மம்பட்டியில் மரச் சிற்பக் குழுமம்**
        - **கிருஷ்ணகிரியில் மூலப்பொருள்கள் கிடங்கு குழுமம்**
        - **ஈரோட்டில் மஞ்சள் தூள் உற்பத்தி செய்யும் குறுந்தொழில் குழுமம்**
        - **ஈரோடு மாவட்டம் பவானியில் ஜமக்காளம் உற்பத்தி செய்யும் குறுந்தொழில் குழுமம்**

      ஆகியவற்றுக்கு பொது வசதி மையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
    - **தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம்**:
        - நாட்டில் எளிமையாக தொழில் புரிதல் பட்டியலில் தமிழகம் **14வது**

**இடத்தில்** இருந்து இப்போது **மூன்றாவது இடத்திற்கு** முன்னேறி உள்ளது.

- முதல் இடத்தை பிடிப்பதே தமிழக அரசின் இலக்கு.
- **'ஸ்டார்ட் அப்'** இந்தியா வெளியிட்ட தரவரிசை பட்டியலில் சிறந்த புத்தொழில் செயல்பாடுக்கான **'லீடர்'** அங்கீகாரத்தை தற்போது தமிழகம் பெற்று இருக்கிறது.
- கடந்த 2000 - இல் அப்போதய முதல்வர் **மு.கருணாநிதி சென்னையில் திறந்து வைத்த டைடல் பூங்கா** தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பு புரட்சியை ஏற்படுத்தியது.
- இதைத் தொடர்ந்து கோவையில் தகவல் தொழில்நுட்ப பூங்கா உருவாக்கப்பட்டது.
- இப்போது திருப்பூர், விழுப்புரம், தூத்துக்குடி, தஞ்சாவூர், சேலம், வேலூர் மற்றும் உதகை ஆகிய இடங்களில் புதிய டைடல் பூங்காக்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.
- இதன் தொடர்ச்சியாக **மதுரை நகரின் மையப்பகுதியான மாட்டுத்தாவணியில்** இரண்டு கட்டங்களாக இந்த பூங்கா கட்டப்படும்.
- முதற்கட்டமாக ரூபாய் 600 கோடியில் 5 ஏக்கரில் இது அமைக்கப்படும்.
- இரண்டாம் கட்டத்தில் மேலும் ஐந்து ஏக்கரில் விரிவாக்கம் செய்யப்படும்.
- இந்த பூங்காவானது தகவல் தொழில்நுட்பம் மற்றும் புதிய தொழில்நுட்பங்களுக்கு தரமான உள் கட்டமைப்பு வசதிகளை வழங்குவதுடன் மதுரை மண்டலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் வகுக்கும்.
- முதல் கட்டத்தில் **பத்தாயிரம் பேர் வேலைவாய்ப்பு பெறுவர்** என்று எதிர்பார்க்கிறோம் என்றார்.

## 3. காலை உணவு திட்டத்திற்கு விவசாயிகளிடம் சிறுதானியங்கள் கொள்முதல்

- முதலமைச்சரின் காலை உணவு திட்டத்திற்கு விவசாயிகளிடம் சிறுதானியங்களை கொள்முதல் செய்ய வேண்டுமென தமிழக அரசின் தலைமைச் செயலர் **வெ.இறையன்பு** அறிவுறுத்தியுள்ளார்.
- இது தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த ஆலோசனை கூட்டம் தலைமைச் செயலகத்தில் தலைமை செயலர் இறையன்பு தலைமையில் நடைபெற்றது.
- பொதுமக்கள் உடைய அரிசி உணவு பயன்பாடு அதிகரித்து சோளம், கம்பு, கேழ்வரகு, தென்னை, வரகு, சாமை, குதிரைவாலி போன்ற சிறுதானியங்களையும் பயன்பாடு வெகுவாக குறைந்து விட்டது.
- ஐக்கிய நாடுகள் சபை **2023 ஆம் ஆண்டு சர்வதேச சிறுதானிய ஆண்டாக** அறிவித்துள்ளது.

### 4. பள்ளிப் புத்தகம் மேம்பாட்டு திட்டம்

- ❖ பள்ளி பருவத்திலேயே மாணவர்களின் சிந்தனை உடையவர்களாக உருவாக்கும் பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார்.
- ❖ **பள்ளி புத்தாக்கம் மேம்பாட்டு திட்டம்:**
  - ➢ **தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனமும் பள்ளி கல்வித்துறையும் யுனிசெப் நிறுவனத்துடன்** இணைந்து இத்திட்டத்தை செயல்படுத்த உள்ளன.
  - ➢ நிகழாண்டில் முதல் கட்டமாக அரசு மற்றும் அரசு உதவி பெறும் அனைத்து மேல்நிலைப் பள்ளிகளில் **ஒன்பது முதல் 12 ஆம் வகுப்பு** வரையில் பயிலும் **1.56 லட்சம் மாணவர்களுக்கும், 1320 ஆசிரியர்களுக்கும்** தொழில் முனைதல் பற்றிய விழிப்புணர்வு அளிக்கப்படும்.
  - ➢ மாணவர்களிடையே புத்தாக்க சிந்தனையை ஊக்குவிக்கும் வகையில் சிறந்த 40 புத்தாக்க சிந்தனைகளுக்கு **ரூபாய் 25 ஆயிரம் முதல் ஒரு லட்சம் வரை** ரொக்கப் பரிசு வழங்கப்படும்.
  - ➢ தொழில் முனைவோருக்கு விருதுகள் 2021 - 22 ஆம் ஆண்டிற்கான மாநில அளவிலான சிறந்த தொழில் முனைவோருக்கான விருதுகளை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்.
    - ✓ **சிறந்த தொழில் முனைவோர் விருது (தூத்துக்குடி கல்பகா கெமிக்கல்ஸ்)**
    - ✓ **வேளாண் சார்ந்த தொழில் விருது (திருப்பத்தூர் மாவட்டம் ப்ரெஸ்ரா பிக்கில்ஸ்)**
    - ✓ **தரம் மற்றும் ஏற்றுமதி விருது (தூத்துக்குடி ரமேஷ் ஃபிளவர்ஸ்)**
    - ✓ **சிறந்த மகளிர் தொழில் முனைவோர் விருது (செங்கல்பட்டு மாவட்டம் ஐசிஏ ஸ்பெஷாலிட்டி)**
    - ✓ **சிறப்பு பிரிவினருக்கான விருது (புதுக்கோட்டை மாவட்டம் பிரபு இண்டஸ்ட்ரியல்) ஆகிய விருதுகள் வழங்கப்பட்டன.**
  - ➢ குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு அதிக கடன் வழங்கிய முதல் மூன்று வங்கிகளான முறையை **இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பரோடா வங்கி** ஆகிய வங்கிகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

### 5. கி.ரா விருது

- ❖ **கோவை விஜயா வாசகர் வட்டம்** சார்பில் ஆண்டுதோறும் சிறந்த எழுத்தாளருக்கு **ரூபாய் 5 லட்சம் ரொக்க பரிசுடன்** கி.ரா விருது வழங்கப்பட்டு வருகிறது.
- ❖ **சக்தி மசாலா நிறுவனம்** வழங்கும் விஜயா வாசகர் வட்டத்தில் 2022 ஆம் ஆண்டுக்கான கி.ரா விருதுக்கு கனடாவில் வசிக்கும் எழுத்தாளர்

**அ.முத்துலிங்கம்** தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## மத்திய செய்திகள்

### 1. எஸ்சிஓ மாநாடு கூட்டறிக்கை

- இந்தியா, சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், கஜகஸ்தான் தஜிகிஸ்தான், கிர்கஸ் குடியரசு ஆகிய **எட்டு நாடுகளைக்** கொண்ட எஸ்சிஓ (ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பு) மாநாட்டின் முடிவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கை:
  - **பயங்கரவாதம், பிரிவினைவாதத்தின் அனைத்து வடிவங்களாலும் ஏற்படும் பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து எஸ்சிஓ உறுப்பு நாடுகளின் தலைவர்கள் கவலை தெரிவித்தனர்.**
  - **அந்த நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ள பயங்கரவாதிகள், பிரிவினைவாதிகள் விவரம் அடங்கிய ஒரே பட்டியலை தயாரிக்க எஸ்சிஓ அமைப்பு திட்டமிட்டுள்ளது.**
  - **எஸ்சிஓ உறுப்பு நாடுகள் அமைந்துள்ள பிராந்தியத்திற்கு பயங்கரவாதிகள், பிரிவினைவாதிகளால் ஏற்படும் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் நோக்கில் இந்த பட்டியலை தயாரிக்க தீர்மானிக்கப்பட்டு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

### 2. சிடாக்லிப்டின்

- சர்க்கரை நோய் சிகிச்சைக்கான மிகக் குறைந்த விலையிலான **சிடாக்லிப்டின் பாஸ்பேட் கூட்டு மருந்து** மக்கள் மருந்தகங்களில் கிடைக்கும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

### 3. எஸ்சிஓ தலைமை பொறுப்பை ஏற்றது

- இந்தியா ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பின் தலைமை பொறுப்பை உறுப்பினர்கள் சுழற்சி முறையில் வகுத்து வருகின்றன.
- நடைபாண்டுக்கான தலைமை பொறுப்பே உஸ்பெகிஸ்தான் வகித்த நிலையில் **2023** ஆம் ஆண்டுக்கான தலைமை பொறுப்பு இந்தியா ஏற்றது.
- அதன்படி அடுத்த ஆண்டுக்கான **எஸ்சிஓ மாநாட்டை இந்தியா** நடத்த உள்ளது.
- கடந்த **2017** ஆம் ஆண்டில் எஸ்சிஓ கூட்டமைப்பில் நிரந்தர உறுப்பினராக இணைந்த இந்தியா முதல் முறையாக கூட்டமைப்புக்கு தலைமை ஏற்க உள்ளது குறிப்பிடத்தக்கது.
- தலைமை பொறுப்பை ஏற்று இந்தியாவுக்கு **சீனா அதிபர் ஷி ஜின்பிங், ரஷ்ய அதிபர் விளாதிமீர் புதின்** உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்தனர்.
- இந்தியாவை இயற்கையாகவே போட்டி மிக்கதாக மாற்றியுள்ளது.
- நிகழ் 2022-23 நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதாரம் **7.5%** வளர்ச்சிக்கான

உள்ளது.

- நாட்டில் தற்போது 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட **புத்தாக்க ஸ்டார்ட் அப் நிறுவனங்கள்** உள்ளன.
- நூறுக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் **'யூனிகான்'** விற்று முதல் மதிப்பு சுமார் ரூபாய் 7500 கோடி அந்தஸ்தை பெற்றுள்ளன.
- உலக சுகாதார அமைப்பின் **சர்வதேச பாரம்பரிய மருந்துகள் மையம் குஜராத்தில்** கடந்த ஏப்ரலில் தொடங்கி வைக்கப்பட்டது.
- உலக சுகாதார அமைப்பின் கீழ் இயங்கும் ஒரே பாரம்பரிய மருந்துகள் மருந்துகளுக்கான மையம் இதுவே.

### 4. இந்தியாவில் மீண்டும் சிவிங்கிப் புலிகள்

- இந்தியாவில் அழிந்து போன இனமான **சிவிங்கிப்புலிகளை (சீட்டா)** பிரதமர் நரேந்திர மோடி மீண்டும் அறிமுகப்படுத்த உள்ளார்.
- அதன்படி நமீபியாவில் இருந்து விமான மூலம் கொண்டுவரப்படும் **ஐந்து பெண் சிவிங்கிப்புலிகள் மற்றும் 3 ஆண் சிவிங்கிப்புலிகள்** பிரதமர் மோடியால் **மத்திய பிரதேச மாநிலம் குனோ தேசிய பூங்காவில்** விடப்பட உள்ளன.
- உலகிலேயே வேகமாக ஓடக்கூடிய உயிரினமான சிவிங்கிப்புலிகள் ஒரு காலத்தில் இந்தியாவில் அதிக எண்ணிக்கையில் காணப்பட்டன.
- நாட்டில் கடைசியாக காணப்பட்ட சிவிங்கிப்புலி இன்றைய **சத்தீஸ்கர் பகுதியில் கடந்த 1947 இல்** கண்டறியப்பட்டது.
- இந்தியாவில் இந்த இனம் **முற்றிலும் அழிந்து விட்டதாக கடந்த 1952ல்** அறிவிக்கப்பட்டது.

### 5. தடுப்பூசிகள்

- கடந்த இரண்டரை ஆண்டுகளாக ஓர் அறிவியல் புனை கதையை எதிர்கொண்டது போன்ற சூழலை மனிதகுலம் சந்தித்தது.
- கரோனா தொற்றால் ஏற்பட்ட அந்த பாதிப்பின் மூலம் மிகப்பெரிய அனுபவத்தையும், பாடத்தையும் கற்றுக் கொண்டோம்.
- **'சீரம் இன்ஸ்டிட்யூட் ஆஃப் இந்தியா'** நிறுவனமானது துளியும் சோர்வடையாமல் 200 கோடிக்கும் மேற்பட்ட தடுப்பூசிகளை உற்பத்தி செய்தது.
- இது உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதி மக்களுக்கு தடுப்பூசி வழங்கியதற்கு நிகரான எண்ணிக்கை என்பது குறிப்பிடத்தக்கது.
- தடுப்பூசி செலுத்துவதற்கும் அதை முறைப்படுத்துவதற்கும் **கோவிட் செயலியில்** மிகப்பெரிய உறுதுணையாக அமைந்தது.
- மக்கள் தொகையில் உலகிலேயே இரண்டாவது பெரிய நாடாக திகழும் இந்தியாவில் **96.7 சதவீத** பொதுமக்களுக்கு முதல் தவணை தடுப்ப தடுப்பூசி செலுத்தப்பட்டிருக்கிறது.
- **89.2 சதவீதம்** பேர் இரண்டாம் தவணை தடுப்பூசியை செலுத்தியுள்ளனர்.
- இதுவரை **18.7 கோடி** முன்னெச்சரிக்கை தவணைகள் வழங்கப்பட்டு

இருக்கின்றன.

- உலக அளவில் கரோனா தொற்றுக்கு எதிரான தடுப்பூசி திட்டங்களால் சுமார் 2 கோடி மரணங்கள் தடுக்கப்பட்டுள்ளன.

### 6. பிண்ணாக்கு ஏற்றுமதி 71% அதிகரிப்பு

- இந்தியாவின் பிண்ணாக்கு ஏற்றுமதி ஆகஸ்ட் மாதத்தில் 71% உயர்ந்துள்ளது.
- இது குறித்து **இந்திய செக்கு உரிமையாளர்கள் சங்கம்** எஸ்இஏ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
  - கடந்த ஆகஸ்ட் மாதத்தில் நாட்டின் பிண்ணாக்கு ஏற்றுமதி 2,82,498 டன்னாக உள்ளது.
  - இது கடந்த ஆண்டின் இதே மாத ஏற்றுமதியான 1,64,831 டன்னுடன் ஒப்பிடுகையில் 71% அதிகமாகும்.
  - **ராப் சீட் பிண்ணாக்கு ஏற்றுமதி**
    - ✓ **கடந்த ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தின் 5,42,630 டன்களுடன் ஒப்பிடும்போது இந்த ஆகஸ்டில் 10,80,172 டன் என இரட்டிப்பாகியுள்ளது.**
  - **சோயா பிண்ணாக்கு ஏற்றுமதி**
    - ✓ **இந்த நிதியாண்டின் முதல் ஐந்து மாதங்களில் 1,55,757ல் இருந்து 1,08,258 டன் ஆக குறைந்துள்ளது.**
  - **ஆமணக்கு பிண்ணாக்கு ஏற்றுமதி**
    - ✓ **1,27,371 டன்னிலிருந்து 1,29,350 டன்னாக உயர்ந்துள்ளது என்று இந்த அறிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது.**

### 7. அமெரிக்க கடலோர காவல் படை கப்பல் கூட்டுப் பயிற்சி

- கூட்டு பயிற்சியில் ஈடுபடுவதற்காக அமெரிக்க நாட்டின் கடலோர காவல்படை கப்பலான **மிட்ஜெட் 757** சென்னை துறைமுகத்திற்கு வந்தடைந்தது.
- சென்னைக்கு அருகே நடுகடலில் கூட்டு பயிற்சி நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- அமெரிக்க கடலோர காவல் படைகள் பணியாற்றி மறைந்த துணை தளபதியான **ஜான் ஆலன் மிட்ஜெட்டின்** நினைவாக மிட்ஜெட் 757 என பெயரிடப்பட்ட கப்பல் இந்திய கடலோர காவல் படையினருடன் கூட்டுப்பயிற்சியில் ஈடுபடவும் நல்லெண்ண பயணமாகவும் சென்னை துறைமுகம் வந்தடைந்தது.

## <u>விளையாட்டு செய்திகள்</u>

### 1. 76 ஆவது கிராண்ட் மாஸ்டர்

- கர்நாடக மாநிலம் பெங்களூரை சேர்ந்த இளம் செஸ் போட்டியாளர் **பிரணவ் ஆனந்த்**.

- இந்தியாவில் **76 வது கிராண்ட் மாஸ்டர்** ஆனார்.
- ருமேனியாவில் தற்போது நடைபெற்று வரும் உலக யூத் செஸ் சாம்பியன்ஷிப் போட்டியின் மூலம் **2500 ஈலோ மார்க்கை** அவர் எட்டியதை அடுத்து கிராண்ட் மாஸ்டர் ஆகும் தகுதியை பூர்த்தி செய்தார்.
- ஒரு செஸ்வீரர் கிராண்ட் மாஸ்டர் பட்டம் பெறுவதற்கு 2500 ஈலோ புள்ளிகளை எட்டுவதுடன், தலா **ஒன்பது சுற்றுகள் கொண்ட மூன்று போட்டிகளில், இரு முறை சாதகமான முடிவுகளை (நார்ம்)** பெற்றிருக்க வேண்டும்.